# காலாண்டுத் தேர்வு - 2023

வகுப்பு : 8 **தமிழ்** பதிவு எண் :

காலம் : 2.30 மணி மொத்த மதிப்பெண்கள் : 100

## பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 15x1=15

1. உடல்நலம் என்பது .................................. இல்லாமல் வாழ்தல் ஆகும்.
   அ) அணி ஆ) பணி இ) பிணி ஈ) மணி
2. நலமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........................................
   அ) நலம்+எல்லாம் ஆ) நலன்+எல்லாம் இ) நலம் + எலாம் ஈ) நலன்+எலாம்
3. உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று ............................
   அ) தலைவலி ஆ) காய்ச்சல் இ) இரத்தக்கொதிப்பு ஈ) புற்றுநோய்
4. கீழ்க்காணும் சொற்களில் பெயரெச்சம் ................................
   அ) படித்து ஆ) எழுதி இ) வந்து ஈ) பார்த்த
5. கற்றவருக்கு அழகு தருவது ..............................................
   அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி
6. கல்விப் பயிற்சிக்குரிய பருவம் ..................................................
   அ) இளமை ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை
7. பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது .............................. ஆகும்.
   அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) பயனிலை ஈ) வேற்றுமை
8. இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் ...................................
   அ) இ,ஈ ஆ) உ,ஊ இ) எ,ஏ ஈ) அ,ஆ
9. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ....................... காரணமாக அமைந்தது.
   அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை இ) அச்சுக்கலை ஈ) நுண்கலை
10. இயற்கையைப் போற்றுதல் தமிழர் ....................................
    அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு
11. சீருக்கு+ஏற்ப – என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..........................................
    அ) சீருக்கு ஏற்ப ஆ) சீருக்கேற்ப இ) சீர்க்கேற்ப ஈ) சீருகேற்ப

**பொருத்துக.**

12. நடந்து – பெரியபுராணம்
13. இராமனுக்குத் தம்பி இலக்குவன் – பத்துப்பாட்டு
14. இயற்கை ஓவியம் – நான்காம் வேற்றுமை
15. இயற்கை அன்பு – வினையெச்சம்

M.Poovarasan



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

## பகுதி - II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 4x2=8
**21வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.**

16. திரு.வி.க சங்கப்புலவர்களாகக் குறிப்பிடுபவர்களுள் நால்வர் பெயர்களை எழுதுக.
17. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.
    அ) எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் வீரமாமுனிவர்.
    ஆ) உலகம் ஐம்பூதங்களால் ஆனது.
18. நம்மை நோய் அணுகாமல் காப்பவை எவை ?
19. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை ?
20. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது ?
21. 'தன் குற்றம்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5x2=10

22. தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக.
    அ) கடமையைச் செய். ஆ) சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார் ?
23. கீழ்க்காணும் சொற்களைப் பெயரெச்சம், வினையெச்சம் என வகைப்படுத்துக.
    (எறிந்த, பிடித்து, பார்த்து, நல்ல)

| பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|
| | |
| | |

24. சொற்றொடரில் அமைத்து எழுதுக.
    அ) அழகு ஆ) அணிகலன்
25. கலைச்சொல் தருக.
    அ) Talent ஆ) Herbs
26. நிறுத்தற்குறிகளை இடுக.
    திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுப்பு கொண்டது.
27. உவமைத் தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
    அ) உடலும் உயிரும் போல ஆ) மடை திறந்த வெள்ளம் போல
28. சரியான மரபுச் சொல்லை எழுதுக.
    அ) கோழி ........................... (கொக்கரிக்கும், கூவும்)
    ஆ) மயில் ........................... (கூவும், அகவும்)

## பகுதி - III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2x3=6

29. நோய்கள் பெருகக் காரணம் என்ன ?



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது கல்வி எனப்படும். மனிதர்களது வாழ்வில் உடலோம்பலுடன் அறிவோம்பலும் நிகழ்ந்து வரல் வேண்டும். அறிவோம்பலுக்குக் கல்வி தேவை. அக்கல்விப் பயிற்சிக்குரிய பருவம் இளமை என்பதை விளக்க வேண்டுவதில்லை. இதுபற்றியே, 'இளமையில் கல்' என்னும் முதுமொழி பிறந்தது.

அ) அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது எது ?

ஆ) கல்விப் பயிற்சிக்குரிய பருவம் .......................... பருவம்.

இ) கல்வி பற்றிய முதுமொழியை எழுதுக.

31. எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார். ?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2x3=6

**34 வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.**

32. புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை ?

33. தமிழ் மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துக்களை எழுதுக.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) "உடலின் உறுதி ................." எனத் தொடங்கும் வருமுன் காப்போம் பாடல் (அல்லது)

ஆ) "கற்றோர்க்குக் ..................." எனத் தொடங்கும் கல்வி அழகே அழகு பாடல்.

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2x3=6

35. எச்சம் என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?

36. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன ?

37. "வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்." இக்குறளில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5x5=25

38. நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

நோயின் வகைகள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை ?

39. விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக்கடிதம் எழுதுக.

40. கீழ்க்காணும் படம் சார்ந்த சொற்கள் 10 எழுதுக.





Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**41.** கீழ்க்காணும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.




அ) புத்தகத் திருவிழா எங்கு நடைபெறுகிறது ?
ஆ) எத்தனை ஆண்டுகளாக புத்தகத் திருவிழா நடத்தப்படுகிறது ?
இ) புத்தகத் திருவிழா எத்தனை நாள்கள் நடைபெறுகிறது ?
ஈ) புத்தகத் திருவிழாவுக்கான நுழைவுக் கட்டணம் எவ்வளவு ?
உ) புத்தகம் வாங்குவோருக்கு வழங்கப்படும் சலுகை யாது ?

**42.** பள்ளியிலும் வீட்டிலும் உன் பொறுப்புகள் எவையேனும் ஐந்தினை எழுதுக.

## பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்** 3x8=24

**43.** எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.

( அல்லது )

காப்பியக் கல்வி குறித்துத் திரு.வி.க. கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**44.** திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.

( அல்லது )

"வெட்டுக்கிளியும் சருகுமானும்" கதையைச் சுருக்கி எழுதுக.

**45.** கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

முன்னுரை – நூலகத்தின் தேவை – வகைகள் – நூலகத்தில் உள்ளவை – படிக்கும் முறை – முடிவுரை.

( அல்லது )

முன்னுரை – நோய் வரக் காரணங்கள் – நோய் தீர்க்கும் வழிமுறைகள் – வருமுன் காத்தல் – உணவும் மருந்தும் – உடற்பயிற்சியின் தேவை – முடிவுரை.

--------

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com